## கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2016

-----------------------------------------------------------------------------------------------------------------------

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என தற்போது அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

-----------------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 செப்தெம்பர் 20 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டியதுடன் ஒப்பந்தம் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் பதியப்பட வேண்டும். செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட 04 ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா 3,251.09 மில்லியனாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 2,586.95 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. வித்தியாசமான ரூபா. 664.14 மில்லியன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கன பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 14,087 | 17,922 | 4,187 | 747.61 | 1,017.60 | 2,118.51 | 2,725.58 |
| இலங்கை அரசாங்கம் | 3,191 | 4,060 | 144 | - | 94.38 | - | 393.27 |
| **மொத்தம்** | **17,278** | **21,982** | **4,331** | **747.61** | **1,111.98** | **2,111.51** | **3,118.85** |

செயற்திட்டமானது ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதன்விளைவால், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 05 ஆண்டுகள் கடந்த பின்னர் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 14,087 மில்லியன் மொத்த கடன் தொகையில், 15 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தகின்ற ரூபா 2,118.51 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,725.58 மில்லியன் மாத்திரமே பயன்படுத்ததப்பட்டிருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ரூபா 4,187 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில் 24 சதவீதத்திற்குச் சமமான ரூபா 1,017.60 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் முறையே 27.71 சதவீதம் மற்றும் 16.26 சதவீதத்தில் இருந்தது. ரூபா 16,077 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 12,636 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட சிவில் நிர்மாண வேலைகள் 04 பிரதான பொதிகளின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் அதில் 02 ஒப்பந்த பொதிகளின் கீழான சிவில் நிர்மாண வேலைகள் உரிய ஒப்பந்த காலத்தின் 47 சதவீதம் மற்றும் 60 சதவீதம் கடந்த பின்னர் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக வேலைகளில் 20 சதவீதம் மற்றும் 33 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது ஏனைய 02 பொதிகளின் கீழ் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், உரிய ஒப்பந்த வேலைகளின் கீழான நிர்மாண வேலைகள் 2016 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

3.3 **ஒப்பந்த நிர்வாகம்**

--------------------------

கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம், பிரதான நீரிறைக்கும் நிலையம், சுத்திகரிக்க்பபட்ட வழிந்தோடும் கழிவகற்றல் முறைமை, சேறு உலர்த்தல் படைகள் மற்றும் செயற்பாடு மற்றும் பராமரிப்பு உபகரணங்களை வழங்கல் என்பவற்றின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆரம்ப அறிக்கை மற்றும் விரிவான வடிவமைப்பு என்பன ஒப்பந்தம் வழங்கிய திகதியிலிருந்து 10 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. வடிவமைப்பு வெலைகளிற்காக 2015 திசெம்பர் 31 இல் ரூபா 80 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஆரம்ப விரிவான வடிவமைப்புகள் 2016 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 **நிதிக்கட்டுப்பட்டு விடயங்கள்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு, மீளாய்வாண்டின் போது ரூபா 16,061 மில்லியனில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான கணப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.